2024 பிப்ரவரி 21]

(ஆ) குடவாசல், நன்னிலம் தொகுதி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு கலைக் கல்லூரி கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.*

***திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவாரூர் மாவட்டம், நன்னிலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குடவாசலில் கடந்த 2017 ஆம் ஆண்டு, அன்றைய முதலமைச்சரான திரு. எடப்பாடி அவர்களால் ஒரு கல்லூரி வழங்கப்பட்டு, அந்தக் கல்லூரி புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு கலைக் கல்லூரி என இயங்கி கொண்டிருக்கிறது. அந்தக் கல்லூரியைக் கட்ட அப்போது இடம் பார்த்தோம். ஆனால், அந்த இடம் அறநிலையத் துறையின் இடம் என்பதனாலும், நீதிமன்றத்தில் வழக்கு இருந்ததன் காரணமாகவும் அப்பொழுது கட்டமுடியாமல் போய்விட்டது. பின்னால், கொரோனா காலம், ஆட்சி மாற்றம். இப்பொழுது அந்தக் கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்னவென்று சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. இரா. காமராஜ்: *கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இரண்டு முறை நான், இதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன். இது மூன்றாவது முறை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் இருப்பார்கள் என்று எண்ணினேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தற்போது அவையில் இல்லை. ஏனென்று சொன்னால், திருவாரூர் மாவட்டம் என்பதனால். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்ந்த மாவட்டம் என்பதனால், எங்கள் தொகுதி மக்களுக்கு, ஒரு நீதி கிடைக்க வேண்டுமென்பதற்காக நான் இதைக் குறிப்பிடுகிறேன். இப்பொழுது எனக்கு அதில் ஒரு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. உங்கள் தொகுதியில் இருப்பது, இடம் இல்லாததால் மாறிப் போகிறது என்று*

சொல்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்வார். (குறுக்கீடு)

திரு. இரா. காமராஜ்: அதன் தொடர்ச்சி ஐயா. எனக்கு ஓர் ஆறுதல் அதில் வந்தது. என்னவென்று சொன்னால், 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின்கீழ் நன்னிலம் தொகுதியில் ரூ.15 கோடியில் அந்த அரசுக் கல்லூரி கட்டப்படும் என்ற அறிவிப்பினைத் தந்துள்ளார்கள். இன்றைக்கும் அந்த அறிவிப்பு வந்திருக்கிறது. ஆனால், வேறு தொகுதியில் கட்டடம் கட்டுவதற்கு, நேற்று tender விடப்பட்டிருக்கிறது. எனவே, நன்னிலம் தொகுதி, குடவாசல் பகுதியிலே செயல்பட்டுக்கொண்டிருக்கிற அந்தக் கல்லூரி அங்கேயே செயல்பட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்ட நிதியானது என்னுடைய தொகுதியிலே செலவிடப்பட வேண்டும். தவறான தகவலைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இடம் தயாராக இருக்கின்றது. அதற்கான இடத்தைக் கொடுப்பதற்கும் அந்தப் பகுதி மக்கள் தயாராக இருக்கின்றார்கள். அந்தப் பகுதி மக்கள், மாணவர்கள் மற்றும் பொது நலச் சங்கங்களின் கோரிக்கைகள் ஆகியவற்றை ஏற்று, நன்னிலம் சட்டமன்றத் தொகுதி, குடவாசல் பகுதியிலேயே, அந்த அரசுக் கலைக் கல்லூரி இயங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களை, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக வலியுறுத்தி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திருவாரூர் மாவட்டம், குடவாசல் பகுதியில் கலைக் கல்லூரி ஒன்று 2017 ஆம் ஆண்டிலே கட்டப்பட வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், நன்னிலம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் கேட்கப்பட்டுள்ளது. கொரோனா காலம் கிடையாது; அதற்கு முந்தைய காலம். 10 வருடங்களாக அவர் சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்றார். 2017 ஆம் ஆண்டு முதல் இதுவரைக்கும் 6, 7 வருடங்களாக இடம் ஒதுக்கிக் கொடுக்க முடியவில்லை; அவர்களால் வாங்கிக் கொடுக்க முடியவில்லை. குடவாசல் பகுதியிலிருந்து, பக்கத்தில் இருக்கின்ற இடத்தில் இப்போது கட்டடம் கட்டுவதற்காக நம்முடைய ஆட்சிக் காலத்திலும்

முயற்சி செய்தார்கள். அந்த அடிப்படையிலே இப்போது கட்டடம் கட்டுவதற்கு tender விடப்பட்டு, வேலைகளைத் துவங்குவதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் ஏற்பாடுகள் அனைத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையின்பேரில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

முற்பகல் 11–50

அந்த அடிப்படையிலே, குடவாசலுக்கு பக்கத்தில், 2 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற இடத்தை, மாவட்டச் செயலாளர் மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாக விலைக்கு வாங்கி, அந்தக் கல்லூரியைக் கட்டுகிறோம். ஆகவே, அவருடைய தொகுதிக்கு எந்தவிதப் பாதிப்பும் இல்லை. கிட்டத்தட்ட 853 பேர் அந்தக் கல்லூரியில் படிக்கிறார்கள். பெண்கள்தான் அதிகமாக படிக்கிறார்கள். 583 மாணவிகள் படிக்கிறார்கள். மீதம் உள்ளவர்கள் ஆண்கள். அவர்களுடைய பத்தாண்டுக்கால ஆட்சியில் அந்தக் கல்லூரியைக் கட்டியிருக்கலாம். இடம் கிடைக்காத காரணத்தினால்தான், அவர்களாலும் அந்தக் கல்லூரியைக் கட்ட முடியவில்லை. அவர்களை நான் குறை சொல்லவில்லை; இடம் கிடைக்கவில்லை. குடவாசல் பகுதியில் கல்லூரி அமைக்க இடம் இல்லாத காரணத்தால், பக்கத்தில் இருக்கக்கூடிய பகுதியில் இடம் வாங்கிக் கொடுக்கப்பட்டு, கல்லூரி கட்டுவதற்காக டெண்டர் விட முடிவு செய்யப்பட்டு, வேலைகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அச்சப்படத் தேவையில்லை. கல்லூரி அந்தப் பகுதியிலே வரும். அந்தக் கல்லூரிக்குத் தேவையான வகுப்பறைகள் இருக்கின்றன. மேலும், மாணவ, மாணவியர்கள், 35 ஆசிரியர்கள், மற்ற பணியாளர்களெல்லாம் இருக்கிறார்கள். குறை ஒன்றும் கிடையாது. நீங்கள் குடவாசல் பகுதியில் கல்லூரி அமைக்க வேண்டுமென்று கேட்கிறீர்கள். அங்கு இடம் கிடையாது. அதற்குப் பக்கத்திலே இடம் இருக்கிற காரணத்தினால்தான், அங்கு கல்லூரி அமைக்கிறோம். இப்போது நீங்கள் சொல்கிறீர்கள். பத்து வருடங்களாக நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? (குறுக்கீடு) 10 வருடங்களாக ஆட்சியில் இருந்தீர்கள், அப்போது இடம் வாங்கித் தந்திருக்க வேண்டுமல்லவா! இரண்டு வருடங்களுக்குப் பிறகு ஓர் இடத்தைத் தேர்வு செய்து, அந்த இடத்தை விலைக்கு வாங்கி, கல்லூரி அமைப்பதற்காக டெண்டர் விடப்பட்ட பின்னர், இப்போது திடீரென்று இடம் இருக்கிறது

என்று சொன்னால் எப்படி? ஆகவே, கல்லூரி கட்டுவதற்கான வேலைகள் துவங்கப்படும். எனவே, நீங்கள் அச்சப்படத் தேவையில்லை. இந்த ஆட்சியிலே, குடவாசலுக்கு பக்கத்திலே கல்லூரி நிச்சயமாகத் தொடங்கப்படும், நடத்தப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. காமராஜ், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேட்டுவிட்டு பின்னர் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நான் சொல்வதை நீங்கள் உள்வாங்கிக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) இல்லை, நான் சொல்வதை நீங்கள் உள்வாங்கிக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) நான் சொல்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடு) கல்லூரி அமைப்பதற்கு 7, 8 ஆண்டுகளாக இடம் கிடைக்காததால், இப்போது புதிய இடம் குடவாசல் பகுதிக்கு அருகிலே கிடைத்திருக்கிறது. ஒரு தொகுதியில் கல்லூரி அமைக்கிறார்களென்றால், அந்தத் தொகுதியிலுள்ள மக்கள் மட்டும் படிப்பதற்கல்ல. எல்லோருமே படிப்பதற்குத்தான் கல்லூரி. “குடவாசலுக்கு பக்கத்தில்தான் கல்லூரி கட்டுவதற்கான இடத்தை நாங்கள் தேர்வு செய்திருக்கிறோம், அந்த இடத்தில்தான் கல்லூரி கட்டப் போகிறோம்” என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்திவிட்டார்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை. நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) என்னையே நீங்கள் பேச விட மாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நான் பேசி முடித்ததற்குப் பிறகு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்துவிடுகிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உட்காருங்கள். பின்னர் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) 7, 8 ஆண்டுகளாக இடம் கிடைக்கவில்லை. இப்போது இடம் பார்த்து கல்லூரி கட்டுகிறோம் என்று மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்ல வருவதை நீங்கள் கேட்க மாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில் உங்களுக்கு ஏதேனும் நிறை, குறை இருக்குமானால், அவர்களை நேரில் சந்தித்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் நேரில் சந்தித்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நீங்கள் நேரில் சந்தித்துப் பேசுங்கள் என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நீங்கள் நேரில் சந்தித்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள். (குறுக்கீடுகள்)

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்களை நேரில் சென்று பார்க்கச் சொல்லி, சொல்கிறேன். (குறுக்கீடுகள்)*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. உதயகுமார் அவர்கள், அவருக்கு support-*க்கு எழுந்து நிற்கிறார். (குறுக்கீடு) நீங்கள் எல்லோரும் பேசினால் எப்படி? உங்களுக்கு ஒரே கேள்விதான். அதற்கான பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர் சொன்ன பதிலில் உங்களுக்கு திருப்தி இல்லையென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்களை நேரில் சென்றுதான் பார்க்க வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ், இன்னொரு கேள்வியைக் கேட்டுவிட்டு அமருங்கள்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி அமைப்பதற்கான இடம் தற்போது தயாராக இருக்கிறது. இப்போது குறிப்பிட்டிருக்கிற இடம் 76 பேர் கொண்ட கூட்டுப் பட்டாவில் இருக்கிற கிராம சமுதாய இடம். அதிலுள்ள ஒரு ஏக்கர், கள புறம்போக்கு ஆகும். அதுவும் பொருத்தமான*

[திரு. இரா. காமராஜ்] [2024 பிப்ரவரி 21

இடம் கிடையாது. நான் காட்டிய இடமெல்லாம் பொருத்தமான இடமில்லையென்று மாவட்ட நிர்வாகம் நிராகரித்துவிட்டது. எனவே, பொருத்தமான இடம் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி. (குறுக்கீடு) நன்றி. (குறுக்கீடு) மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்தில் என்ன குறை இருக்கிறது? அந்த இடத்தை விலைக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறோம். குடவாசல் பகுதியிலிருந்து 2 கிலோ மீட்டர் தூரத்தில்தான் இருக்கிறது. கல்லூரி கட்டுவதற்கு நீங்கள் 10 வருடங்களாக இடம் வாங்கிக் கொடுக்காததனால், அந்தக் கல்லூரியைக் கட்ட முடியவில்லை. நீங்கள் அமைச்சராக இருந்தீர்கள். நீங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமல்லவா! இந்த ஆட்சியில் ஓர் இடத்தைத் தேர்வு செய்து, அந்த இடத்தை விலைக்கு வாங்கி கட்டிக் கொடுக்கிறோம். (குறுக்கீடு) நீங்கள் ஏன் objection செய்கிறீர்கள்? கல்லூரி வரப் போகிறது. அந்தக் கல்லூரி வேறு தொகுதிக்கு செல்லப் போவதில்லை. உங்களுடைய தொகுதியில்தான் இருக்கும். நீங்கள் 10 வருடங்களாக அமைச்சராக இருந்தீர்கள். ஆனால், கல்லூரி கட்டுவதற்கு இடம் வாங்கிக் கொடுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–55

மாண்புமிகு முனைவர் டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் மாவட்டம், திருவாரூர் மாவட்டம். அந்த மாவட்டத்தை பார்த்து, பார்த்து செதுக்கி அதற்குத் தேவையான அனைத்து விஷயங்களையும் செய்து, அந்த மாவட்டத்தையே உருவாக்கிய தலைவர் கலைஞர் அவர்களின் பிள்ளை ஆட்சி நடத்தும் இந்த வேளையில் திருவாரூர் மாவட்டத்தில், நன்னிலம் சட்டமன்றத் தொகுதியில், குடவாசல் பகுதியில் வரும் இந்தக் கல்லூரிக்குத் தேவையான இடத்தை ஒதுக்க, சென்ற ஆட்சியிலேயே அவர்கள் சரியான முறையிலே நடவடிக்கைகள்

எடுத்திருந்தால் இந்தப் பிரச்சினை இல்லை. ஆனால், அவர்கள் அறிவித்த கல்லூரி என்றும் பாராமல், இன்று நமது திராவிட நாயகன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து அந்த இடத்தில் அந்தக் கல்லூரி மிகச் சிறப்பாக அமைய வேண்டுமென்று எண்ணினார்கள். இப்போது இருக்கிற இட நெருக்கடியில் அந்த இடமும் இப்போது சரியில்லை. அதனால் இன்னும் சரியான இடத்தைத் தேர்வு செய்து, அந்த இடத்தில் அந்தக் கல்லூரி நிச்சயமாக நல்ல முறையில் திறக்கப்பட்டு, நல்ல முறையில் நடக்கும் என்ற அந்த உறுதியை இன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிறார். மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள், எந்தவொரு கவலையும் கொள்ளத்தேவையில்லை. அவர்களது ஆட்சியில் வந்த திட்டமாக இருந்தாலும் சரி, திராவிட நாயகன், திராவிட மாடல் ஆட்சி நடத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில், எடுக்கப்பட்ட திட்டமாக இருந்தாலும் சரி, திருவாரூர் மாவட்டத்திற்குத் தேவையான அனைத்துத் திட்டங்களும் படிப்படியாக, மிகப் பிரம்மாண்டமான அளவில் அனைத்துத் தேவைகளையும் நிச்சயமாகப் பூர்த்தி செய்யும் வகையில் நிறைவேற்றப்படும். இந்த இடத்தில் நிச்சயமாக அந்தக் கல்லூரி நல்லமுறையில் அமையும் என்ற உறுதியை அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, ஒரு நிமிடம். நீங்கள் கேட்டுக்கொண்டு. . . (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள் (குறுக்கீடுகள்) சொல்கிறேன். இல்லை, உட்காருங்கள் (குறுக்கீடுகள்) சொல்கிறேன். மாவட்ட ஆட்சியர் அவர்கள் மூலமாகத்தான் நிலம் வாங்கியிருப்பார்கள். அந்த* document*-ஐப் பார்ப்பதெல்லாம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் வேலை. உங்களிடம் சரியான இடம் இருந்தால் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் கொடுங்கள். அதன்மூலம் வந்தால் பரிசீலனை செய்யலாம்.*

(இ) ஜல்லிக்கட்டு, ஆன்லைன் டோக்கன் முறையை இரத்து செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*